# மான்மின் செய்திகள்

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது"

## 2012 வேத வினாவிடை போட்டி 'சிறந்தோரில் சிறந்தவர்'











"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் 1:1). பதிவு செய்துள்ளபடியே, வார்த்தையில் அன்புகூர்வது தேவனிடத்தில் அன்பு கூர்வதாகும். வார்த்தையின் மூலமாக நாம் தேவசித்தத்தை உணருகிறபடியால் சரீரம் மற்றும் ஆவி ஆகிய இரண்டிலும் ஆசீர்வாதங்களை பெறச்செய்கிற ஒரு திறவு கோலாய் அது இருக்கிறது. ■ புகைப்படம் 1 : பிரதான ஆலயத்தின் விசேஷித்த மேடையிலே "சிறந்தோரில் சிறந்தவர்" வேதாகம வினாவிடை போட்டி ■ புகைப்படம் 2 : வெற்றி பெற்றோர்கள் ஜெய பீடத்தில் ■ புகைப்படம் 3 : கூட்டத்தினருக்கான பொதுவான வினாவிடை ■ புகைப்படம் 4 : ஆயத்த குழு அங்கத்தினர்கள் மற்றும் போட்டியாளர்கள்.

ஞாயிறு மாலை ஆராதனைக்கு பிற்பாடு நவம்பர் 11, 2012 அன்று, "சிறந்தோரில் சிறந்தவர்" என்ற வேத வினாவிடை போட்டி புருஷர்கள் ஐக்கியத்தின் நன்கொடையின்கீழ் பிரதான ஆலயத்தின் விசேஷித்த மேடையிலே நடத்தப்பட்டது. அது செயற்கைக்கோள் மற்றும் இணையதளத்தின் மூலமாக உலகமெங்கும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

தேவனுடைய வார்த்தையால் அங்கத்தினர் தங்களை தரிப்பித்துக்கொள்ள ஊக்குவிப்பதற்காக, 2001 துவங்கி 2012ல் 12வது போட்டியின் மூலமாக, மான்மின் மத்திய திருச்சபை வருடந்தோறும் வேத வினாவிடை போட்டி நடத்தியுள்ளது. இந்த வருடம் "சிறந்தோரில் சிறந்தவர்" போட்டி முன்னாள் முதன்மை, தங்கம் மற்றும் வெள்ளி பரிசுகள் பெற்ற வெற்றியாளர்களுடன் நடத்தப்பட்டது. இந்த போட்டி, ஆகஸ்ட் 2009 முதல் ஜூலை 2012 வரை திருச்சபை வாராந்திர அறிக்கை பலகையின் அநுதின வேதவாசிப்பு வசன பகுதியில் தோன்றிய 937 வேத வசனங்களை உள்ளடக்கியது. அதில் 20 போட்டியாளர்கள் பங்கு பெற்றனர்.

புதுமுகத் தேர்வு போட்டியில், இறுதி போட்டிக்கு பத்து மக்களை தேர்வு செய்வதற்கு பயன்பட்ட பத்து கேள்விகள் இருந்தன. 'கொடுக்கப்பட்ட பல வேத பகுதிகளிலிருந்து மற்றவைகளிலிருந்து வித்தியாசமான அர்த்தமுள்ள வேத பகுதியை எழுது' மற்றும் 'செய்தி ஒளி காட்சியை நீங்கள் பார்க்கையில் அல்லது துதிப்பாடலை நீங்கள் கேட்கையில் உங்கள் மனதில்வரும் வேத வசனங்களை எழுதுக' போன்ற கேள்விகள் இருந்தன. இறுதியில், 10 போட்டியாளர்கள் இறுதி சுற்றுக்குள் நுழைந்தனர். அவர்களது புள்ளிகள் கணக்கிடப்படுகையில், ஒரு பொதுவான வினாவிடை கூட்டத்தினருக்கு கொடுக்கப்பட்டது. பின்னர் இறுதி சுற்றுக்கான 12 கேள்விகள் வேக வினா விடை விளையாட்டாக அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. போட்டியாளர்களின், மாகாணங்கள், பணித்தள குழுக்கள் மற்றும் கிளை சபை அங்கத்தினர்களால் கொடுக்கப்பட்ட ஊக்க ஒலியின் மத்தியில் அவர்கள் ஊக்கமாக போட்டியிட்டனர்.

இறுதியாக, முதன்மை பரிசு போதகர் ஃகும்ரான் ஃவாங் (உதவி மாகாண போதகர், மாகாணம் 29)–க்கும், தங்க பரிசு கண்காணியை ஹியுன் ஜூயோ (யோசோ மான்மின் திருச்சபை)–க்கும், வெள்ளி பரிசு கண்காணியை யுன்சன் லீ (தேஜூயான் மான்மின் திருச்சபை)–க்கும், வெண்கல பரிசு கண்காணியை ஹியுன்ஜா பியான் (2–2 கானான் பணித்தளம்)–க்கும் சென்றது.

கவுரவ முதன்மை பரிசு பெற்ற போதகர். ஃவாங் அவர்கள், "கடந்த 11 ஆண்டுகளாக, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வசனம் தொடர்ந்து மனப்பாடம் செய்ய முடிந்ததே காரணம். அப்படி செய்யும்போது எல்லா நேரத்திலும் கிருபையினால் தேவன் என்னை ஆசீர்வதித்தார். நான் பெற்ற கிருபைக்கு கைமாறு செய்வதற்காக மட்டுமே கீழ்ப்படிந்தேன். குறிப்பாக, நம்முடைய திருச்சபை அங்கத்தினர்களையும் தலைமை போதகர். ஜேராக் லீ அவர்களையும் பிரியப்படுத்தும்படியாக சந்தோஷத்துடன் இப்போட்டிக்கு ஆயத்தமானேன்" என்று கூறினார்.

2011 இறுதியில், போட்டி நடைபெறுவதற்கான அறிவிப்பு போட்டியாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அந்நேரத்திலிருந்து அவர்கள் வசனத்தின் அர்த்தத்தைக் குறித்து தொடர்ந்து யோசிக்கவும் வேதத்தை வாசிப்பதால் ஆழமான அர்த்தங்களை தியானிக்கவும், அது சம்பந்தமான செய்திகளை கேட்கவும் செய்தனர். போட்டியாளர்களில் ஒருவர் "அவைகளை நான் மனனம் செய்கையில் என் ஜெபமும் சேவையும் புதுப்பிக்கப்பட்டது. என்னுடைய விசுவாசம் வளர்ந்திருக்கிறதை என்னால் உணரமுடிகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, என் இருதயத்தை காத்துக்கொள்ள பெலனைப் பெற்றேன்" என்று குறிப்பிட்டார்.

உண்மையில், தலைமை போதகர். அறிவர். லீ அவர்கள் திருச்சபை அங்கத்தினர்கள் எந்த அளவாய் தேவனுடைய வார்த்தையை சிறப்பாய் தரித்துக்கொள்ளுகிறார்களோ, அந்த அளவாய் பரிசுத்த ஆவியின் சத்தத்தை தெளிவாய் கேட்க முடியும் என்றும், மாம்சீக எண்ணங்களை அவர்களால் அழிக்கமுடியும் என்றும் கற்பித்திருக்கிறார். வேதத்தை வாசித்து அதன் வசனங்களை மனனம் செய்வது கிறிஸ்தவத்தில் அடிப்படையான காரியம் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார். மேலும், கிறிஸ்தவர்கள் அவைகளை கூர்ந்து ஆராய்ந்து வார்த்தையால் தங்கள் இருதயத்தை 'பண்படுத்த' வேண்டும். 13வது வேத வினாவிடை போட்டி செப்டம்பர் 2013ல் நடத்தப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் ஏன் இதை முயற்சிக்கக் கூடாது?**

[கேள்வி 1 புதுமுகத் தேர்வுக்காக]

இது தேர்ந்தெடுத்து எழுதுவது; கொடுக்கப்பட்டுள்ள நான்கு தேர்ந்தெடுப்புகளில், மற்றவைகளிலிருந்து வித்தியாசமான அர்த்தமுள்ள ஒன்று அல்லது வித்தியாசமானதை வலியுறுத்துவது எது? ஒன்றை தேர்ந்தெடுத்து எண்ணை எழுதவும்.

1. நீதிமொழிகள் 15:1
2. நீதிமொழிகள் 10:11
3. நீதிமொழிகள் 16:32
4. நீதிமொழிகள் 15:4

[கேள்வி 10 இறுதி சுற்றுக்காக]

நான்கு வசனங்களை தருகிறேன். அவ்வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள எண்களை கூட்டு. எண்களின் கூட்டு தொகை என்ன?

1. அப்போஸ்தலர் 20:31
2. உபாகமம் 5:10
3. சங்கீதம் 90:10
4. மாற்கு 10:30

[பொதுவான வினாவிடை 2 கூட்டத்தினருக்காக]

வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டுள்ள ஏழு சபைகளில், எந்த திருச்சபை அனலுமில்லாமல் குளிருமில்லாமல் வெதுவெதுப்பாய் இருந்தபடியால் ஆண்டவரால் கடிந்து கொள்ளப்பட்டது?

1. எபேசு சபை
2. லவோதேக்கியா சபை
3. சர்தை சபை
4. சிமிர்னா சபை

# அன்பு சத்தியத்தில் சந்தோஷப்படும்

"அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்" (1கொரிந்தியர் 13:6)

நாம் தேவனை நேசித்தால், அநியாயத்தில் செயல்படாமல், ஆனால் சத்தியத்தில் செயல்படுவோம். மேலும் சத்தியத்தில் சந்தோஷப்படுவோம். அன்பு என்பது சத்தியத்துடன் சந்தோஷப்படுவதின் செய்வினை வடிவான உயிர்ப் பண்பு.

யோவான் 14:6ல், "அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று வாசிக்கிறோம். இந்த வேத வசனத்தில் பேசப்பட்டுள்ளபடியே, சத்தியம் இயேசுகிறிஸ்துவை குறிக்கிறது. சத்தியம் என்பது சுவிசேஷமும் வேதாகமத்தில் 66 புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறது.

நாம் தேவனை நேசித்து அவரிடத்திலிருந்து அன்பை பெற்றால், நாம் இயேசு கிறிஸ்துவோடும், தேவனுடைய இராஜ்ஜியம் விரிவடையும் சுவிசேஷ பணியிலும் சந்தோஷப்படாமல் இருக்கமுடியாது. பின், சத்தியத்தில் சந்தோஷப்படும் என்று சொல்லப்படுகையில் அது குறிப்பாக எதை குறிக்கிறது?



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

## 1. சத்தியத்தில் சந்தோஷப்படுதல்

### 1) அது சுவிசேஷத்தில் சந்தோஷப்படுதல் ஆகும்.

சுவிசேஷம் என்பது நற்செய்தி ஆகும். அது நாம் இயேசுகிறிஸ்து மூலமாக இரட்சிக்கப்பட்டு, பரலோக ராஜ்ஜியத்திற்கு செல்வோம் என்ற நற்செய்தி ஆகும். யுகங்களாக எல்லா தேசத்தினரும் மக்கள் பலரும் சத்தியத்தை தேடுகிறார்கள். வாழ்க்கையின் நோக்கமென்ன? எது விலையேறப்பெற்ற வாழ்வாகும்? இக்கேள்விகளுக்கான பதில்களைப் பெற அவர்கள் கருத்துக்களையும் தத்துவங்களையும் கற்கிறார்கள் அல்லது மதங்கள் மூலமாக பதில்களைப் பெற முயற்சிக்கிறார்கள். சத்தியமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் மூலமாக அல்லாமல் யாராலும் சத்தியத்தை பெற்று பரலோகத்திற்குள் நுழைய முடியாது.

நாம் இந்நற்செய்தியை கேட்டு, இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இரட்சிப்பை பெற்று, நித்திய ஜீவனை ஆதாயப்படுத்தி இருக்கிறோம். ஆண்டவருடைய இரத்தத்தின் மூலமாக நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டவுடனே நம்முடைய எதிர்காலம் நரகத்திலிருந்து பரலோகத்திற்கு நகர்த்தப்படுகிறது, பின் நாம் வாழ்வின் அர்த்தத்தை புரிந்துகொண்டு விலைமதிப்புள்ள வாழ்க்கை வாழ முடியும். ஆகவே சுவிசேஷத்துடன் நாம் சந்தோஷப்படுவது என்பது கண்கூடாக காணக்கூடிய ஒன்றாகவே அது இருக்கிறது.

சுவிசேஷத்தில் சந்தோஷப்படுபவர்கள் அதைப்பற்றி ஊக்கமாய் மற்றவர்களிடத்தில் கூறுவார்கள். அவர்கள் தேவனால் கொடுக்கப்பட்ட கடமைகளை ஊக்கமாய் நிறைவேற்றி சுவிசேஷத்தை பரப்புவதற்கு உண்மையாய் வேலை செய்வார்கள். 1 தீமோத்தேயு 2:4, "(தேவன்) எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்று கூறுகிறது. நீங்கள் தேவனுடைய இந்த சித்தத்தை அறிந்திருப்பதால், ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்டு ஆண்டவரை ஏற்றுக்கொள்வதால் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களின் எண்ணிக்கை பெருகும்போது நீங்கள் சந்தோஷப்படுவீர்கள்.

ஆனால் சில மக்களோ மற்றவர்கள் பல ஜனங்களுக்கு சுவிசேஷம் கூறி மாபெரும் கனியை விளைவிக்கும்போது பொறாமை கொள்வர். சில திருச்சபைகள் மற்ற திருச்சபைகள் வளர்ந்து தேவனுக்கு மாபெரும் மகிமை செலுத்தும்போது மற்ற திருச்சபைகளோடு போட்டி பொறாமை கொள்கின்றன. இது "சத்தியத்தில் சந்தோஷப்படுவது" என்பதாகாது.

நம் இருதயத்தில் ஆவிக்குரிய அன்பு இருந்தால், பின் தேவனுடைய இராஜ்ஜியம் மாபெரிதாய் அடையப்பெறுவதை காணும்போது நாம் சந்தோஷப்படுவோம். கூடவே, நாம் நம்மைவிட அதிக உண்மையாய் இருந்து அதிகமான கனிகளை விளைவிக்கிற ஒருவருடன் அது நம் சொந்த கனிகள் என்பதுபோல பாவித்து சந்தோஷப்படுவோம். நாம் ஒரு திருச்சபை வளர்ந்து தேவனால் நேசிக்கப்படுவதை பார்க்கும்போது, அதனுடன் இணைந்து சந்தோஷப்படுவோம். இது தான் சுவிசேஷத்துடன் சந்தோஷப்படும் ஆவிக்குரிய அன்பிலிருந்து வந்த இருதயம் ஆகும்.

### 2) இதன் அர்த்தம் சத்தியத்தை சார்ந்த எல்லா காரியத்துடனும் சந்தோஷப்படுதல் ஆகும்.

இது நற்குணம், அன்பு மற்றும் நீதி போன்ற சத்தியத்திற்குரிய காரியங்களைப் பார்த்து, கேட்டு செய்வதில் சந்தோஷப்படுதல் ஆகும். சத்தியத்தில் சந்தோஷப்படுகிறவர்கள் சின்ன நற்செயல்களால்கூட தொடப்பட்டு விடுவார்கள். மேலும், தேவனுடைய வார்த்தைகள் அனைத்தும் சத்தியமாயிருப்பதால், அவர்கள் அது தேனிலும் மதுரம் என்று அறிக்கை செய்வார்கள். ஆகவே அவர்கள் எப்போதும் தேவ செய்திகளை கேட்பதிலும் வேதம் வாசிப்பதிலும் இன்பம் அடைவார்கள். மேலும், தேவனுடைய வார்த்தைகளை பயிற்சி செய்வதில் சந்தோஷப்படுவார்கள்.

உதாரணமாக, தேவனுடைய வார்த்தை "சேவை செய், புரிந்துகொள் மற்றும் மன்னித்துவிடு" என்று சொல்கிறது. அவர்கள் சந்தோஷமாய் அவ்வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவர். இவ்வார்த்தைகளுக்கு கீழ்ப்படிபவர்கள், வெறுத்தல், போட்டி, பொறாமை கொள்ளுதல், மற்றவர்களை நியாயந்தீர்க்குதல் போன்றவற்றை மிகவும் அறுவறுப்பர். ஆகவே சத்தியத்தில் சந்தோஷப்படுபவர்கள் மற்றவர்கள் நன்றாய் இருக்கும்போதும் சந்தோஷப்படுவர். அவர்கள் பொறாமைப்படமாட்டார்கள். அவர்களுக்கு "அந்த நபருக்கு ஏதாவது கெடுதலாய் நடக்க வேண்டும்" என்று பொல்லாப்பாய் நினைப்பது அல்லது மற்ற மக்களின் சந்தோஷமின்மையினால் தாங்கள் சந்தோஷப்படுவது போன்ற பொல்லாத காரியங்களை கற்பனை செய்துகூட பார்க்கமுடியாது.

அநியாயமாய் ஏதோவொன்று நடப்பதை அவர்கள் காணும்போது அதினிமித்தம் அவர்கள் துக்கம் அநுஷ்டிப்பர். கூடவே, சத்தியத்தில் சந்தோஷப்படுபவர்கள், மாறாத, உண்மையுள்ள உத்தம இருதயங்களான நற்குணத்தை சார்ந்த இருதயத்தை நேசிப்பர். அவர்கள் நல்வார்த்தையிலும் நற்செயல்களிலும் சந்தோஷப்படுவர்.

இப்படிப்பட்ட பிள்ளைகளை பார்த்து, தேவன் அவர்கள்மீது செப்பனியா 3:17ல் சொல்லப்பட்டதுபோல, கெம்பீரித்து களிகூறுவார். அதில் வாசிக்கிறோம், "உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்".

சத்தியத்தில் முழுவதுமாய் உண்மையாய் சந்தோஷப்படவில்லையே என்று நினைத்து மனமுடைந்து போகிறவர்கள் யாராகிலும் இருக்கிறீர்களா? உங்களை நீங்கள் பரிசோதனை செய்து பார்க்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் மனதைவிட்டுவிடவோ அல்லது மனமுடைந்து போகவோ வேண்டாம். உங்கள் சிறப்பை நீங்கள் முயற்சித்தால், அன்பின் தேவன் உங்கள் பிரயாசத்தைகூட சத்தியத்தோடு சந்தோஷப்படுவதாக கருதுவார்.

### 3) அது தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதை பயிற்சி செய்ய முயற்சிப்பதை குறிக்கிறது.

ஆரம்பத்திலிருந்தே சத்தியத்தில் மட்டும் சந்தோஷப்படக்கூடிய நபர் ஒருவரை பார்ப்பது என்பது அரியதாகும். நமக்குள் இருளும் சத்தியமற்ற காரியங்களும் இருக்கும்வரையில், நாம் பொல்லாத காரியங்களை நினைக்கலாம் அல்லது அநீதியானவைகளோடு கூட சந்தோஷப்படலாம். வார்த்தையாலும் ஜெபத்தாலும் சத்தியமற்ற இருதயம் அனைத்தையும் நாம் களைந்து போட்டு, காலத்தால் நாம் மாறும்போது மட்டுமே, சத்தியத்தில் பரிபூரணமாய் நாம் சந்தோஷப்படமுடியும். அதுவரையில், நாம் கடினமாய் முயற்சி செய்யவேண்டும்.

உதாரணமாக, கிறிஸ்தவர்கள் எல்லாரும், "ஓ, நான் ஆராதனையில் பங்கு பெறுவதில் மிகவும் சந்தோஷப்படுகிறேன்" என்று உணரமாட்டார்கள். புதிய விசுவாசி என்ற நிலையில் அல்லது விசுவாசத்தில் பெலீனமாக இருப்பவர்கள் அவர்கள் அசதியாக இருக்கலாம் அல்லது அவர்கள் இருதயம் வேறு எங்கோ இருக்கலாம். ஆனால் ஆலயத்திற்கு வந்து ஆராதனையில் பங்குபெறும் செயல் என்பது தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதற்கு முயற்சிக்கும் பிரயாசம் ஆகும். இதுவும்கூட சத்தியத்தில் சந்தோஷப்படுவது ஆகும். அவர்கள் ஏன் இவ்வாறு முயற்சிக்கிறார்கள்? இரட்சிப்பை பெற்று பரலோகத்திற்கு போவதற்காகவே.

சத்தியத்தை நாம் கேள்விப்பட்டு தேவனில் விசுவாசம் வைக்கிறோம், நியாயத்தீர்ப்பு உண்டென்றும், பரலோகம் மற்றும் நரகம் ஆகிய இரண்டுமே உண்டென்றும் விசுவாசிக்கிறோம். பரலோகத்தில் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் வெகுமதிகள் வித்தியாசமாய் இருக்கிறதென்பதை நாம் அறிவோம். அதனால்தான் நாம் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர்களாய் இருந்து பரிசுத்தம் அடைவதற்கு அதிக ஊக்கமாய் முயற்சிக்கிறோம். இன்னமும் 100% சத்தியத்தில் சந்தோஷப்படாதவர்களாய் நீங்கள் இருப்பினும்கூட, உங்கள் விசுவாச அளவில் சிறப்பானதை முயற்சிக்கிறவர்களாய் நீங்கள் இருந்தால், அது சத்தியத்தில் சந்தோஷப்படுவதாய் இருக்கும்.

## 2. சத்தியத்திற்காக பசியும் தாகமும் உள்ளவர்களாய் நாம் இருக்கும்போது ஆசீர்வாதம் அருளப்படும்.

தேவனுடைய பிள்ளைகள் அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படுவர். இதன் காரணம் சத்தியத்திற்கு மட்டுமே நம்முடைய எல்லாக் காரியங்களையும் புதுப்பித்து அவைகளை அழகுப்படுத்தக்கூடிய ஆச்சர்ய வல்லமை இருக்கிறது.

எந்த அளவாய் சத்தியமாகிய சுவிசேஷத்தை கேள்விப்பட்டு அதன்படி வாழ்கிறோமோ அந்த அளவாய் நாம் தேவனுடைய பிள்ளைகளாக அதிகமாய் பூரண மாற்றமடைவோம். நாம் ஆவிக்குரிய அன்பும் பரலோகத்திற்கான நம்பிக்கையோடும் நிரம்பியிருப்பதால் நம்முடைய முகம் மகிழ்ச்சியினால் பிரகாசிக்கும். நாம் சத்தியத்தால் அதிகமாய் மாற்றப்படுகிறபோது, தேவனிடத்திலிருந்தும் மற்ற மக்களிடத்திலிருந்தும் அதிக அன்பை பெற்றுக்கொள்வோம். ஆகவே நம்முடைய வாழ்வு சந்தோஷத்தால் நிரம்பிவிடும்.

நாம் சத்தியத்தில் சந்தோஷப்படவேண்டும். மேலும், சத்தியத்திற்காக நாம் பசியும் தாகமும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். நீங்கள் சரீர பிரகாரமாய் பசியும் தாகமும் உடையவர்களாய் இருந்தால், நீங்கள் உணவையும் பானத்தையும் ஊக்கமாய் நாடுவீர்கள். சத்தியத்திற்காக ஏங்கும்போதுகூட, நாம் இவ்விதமாகவும் கூட ஏங்கவேண்டும். அதனால் நாம் சீக்கிரத்தில் சத்தியத்தின் மக்களாய் மாறமுடியும். நாம் எப்போதும் சத்தியத்தை 'புசித்து குடிக்கிற' வாழ்க்கை வாழவேண்டும்.

'சத்தியத்தை புசித்து குடித்தல்' என்பது தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் வைத்து வைத்து அதை பயிற்சி செய்தல் ஆகும். சத்தியமாய் இருக்கிற தேவனுடைய வார்த்தை, நம்முடைய வாழ்வில் உள்ள பிரச்சனைகளை தீர்க்கவும், ஆசீர்வாதத்தின் இரகசியங்கள் மற்றும் இரட்சிப்பின் வழி, நித்திய ஜீவன் ஆகியவற்றிற்கான திறவுகோல்களை நமக்கு தருகிறது. ஆகவே, நாம் அதை பயிற்சி செய்யும்போது ஆசீர்வாதங்கள் நம்மை பின் தொடரும்.

பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்கள் தேவனை மெய்யாகவே நேசித்தால் அது வெளியே காண்பிக்கப்படும். அதாவது, சத்தியத்தை பற்றி நாம் பார்த்து கேட்கும்போதுகூட நாம் மகிழ்ந்து சந்தோஷப்படுவோம். ஆகவே மக்கள் உங்களிடம் "நீங்கள் சந்தோஷமாய் இருக்கிறீர்கள்" என்று கூறுவார்கள். நாம் தேவனையும் ஆண்டவரையும் நினைக்கும்போது நன்றியினால் கண்ணீர் சிந்துவோம். சிறிய நற்செயல்களினாலும்கூட தொடப்பட்டு கண்ணீர் சிந்துவோம்.

நன்றியின் கண்ணீர், மற்ற ஆத்துமாக்களுக்காக துக்கப்பட்டு வரும் கண்ணீர் போன்ற நற்குணத்தை சார்ந்த கண்ணீர் பின்நாளில் பரலோகத்தில் ஒவ்வொருவருடைய வீட்டை அலங்கரிக்கும் அழகான ஆபரணங்களாய் மாறும். சத்தியத்தினால் சந்தோஷப்படுவதினால், நீங்கள் தேவனால் நேசிக்கப்படுகிறீர்கள் என்று காண்பிக்கும் அடையாளங்கள் உங்கள் வாழ்வில் நிரம்பி வழிவதாக என்று ஆண்டவருடைய நாமத்தினால் உங்களுக்காய் ஜெபிக்கிறேன்.

## விசுவாச அறிக்கை

1 மான்மின் மத்திய திருச்சபை, வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்டபரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.

2 மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியை களையும் நம்புகிறது. பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்

3 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால்மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.

4 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும்,பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.

5 மான்மின் மத்திய திருச்சபை, உறுப்பினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடி வரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை, "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புகின்றனர்.
"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)" அப்போஸ்தலர் (17:25).
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை"
அப்போஸ்தலர் (4:12).

மான்மின் சர்வதேச பாடசாலை
இந்திய வளாகம்

Manmin International Seminary - India campus belongs to the United Holiness Church of Korea of which the chairman of the board of directors is Rev.Dr. Jaerock Lee. It is based on the fivefold Holiness gospel: Regeneration, Sanctification, Divine Healing, Resurrection, and Return of Christ.

DIPLOMA IN CHRISTIAN MINISTRY

(One year correspondence programme)

15D/41, Ponnankinaru Street, Villivakkam, Chennai - 600 049.
Tel:044 - 26172471, Email : indiamis@gmail.com

# எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட விரும்பும் தேவனுடைய அன்பு

தேவன், அவருடன் அன்பை பகிர்ந்து கொள்ளக்கூடிய மெய்யான பிள்ளைகளை பெறுவதற்கு மானுட வேளாண்மைக்கான பணியில் ஓர் திட்டத்தை ஏற்படுத்தி, தம்முடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றியும் இருக்கிறார். அவருடைய மனுஷர்கள் மூலமாக, தேவன், அவர் ஜீவிக்கிறார் என்பதையும் தேவனுடைய வார்த்தையால் அவர்கள் வாழ வேண்டும் என்றும் மக்களுக்கு கற்பித்திருக்கிறார். மேலும், தம்முடைய ஒரேபேறான குமாரனை மனிதர்களிடம் அனுப்பி பாவத்தின் பிரச்சனையை தீர்க்கவும், சிலுவையின் அநாதி தீர்மானமாகிய திட்டத்தை நிறைவேற்றவும் செய்தார்.
கூடவே, பாவம் நிறைந்த உலகத்தில் வாழும் மனிதர்களிடம் பரிசுத்த ஆவியை அனுப்பினார். அதனால் அவர்கள் விசுவாசத்துடன் ஜெயத்தை பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலமாக, அவர் தமது அன்பை விளங்கப்பண்ணினார். மேலும் மனிதர்களுக்கு என்ன தேவை என்பதை அவர் நன்கு அறிந்திருக்கிறார். அவைகளை சரியான நேரத்தில் அவர்களுக்கு கொடுக்கிறார், அது நிறைவை சேர்க்கிறது.
ஸ்தோத்திர பண்டிகையின் நினைவு கூர்தலில் 1 தீமோத்தேயு 2:4ல் எழுதப்பட்டுள்ளபடி எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட விரும்பும் தேவனுடைய மகா பெரிதான அன்பை உங்கள் இருதயத்தில் ஆழமாய் செதுக்கி வைத்து கோதுமை போன்ற விசுவாசிகளாய் தேவனை மகிமைப்படுத்துவீர்கள் என நம்புகிறேன்.

*தம்முடைய பிரியமான பிள்ளைகளை பரலோக ராஜ்ஜியத்திற்கு வழி நடத்துகிற தேவனுடைய அன்பின் தொடுதல்.*

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" (யோவான் 3: 17–18).

"நான் விசுவாசிக்கிறேன்" என்று உங்கள் உதடுகளால் நீங்கள் உங்களது விசுவாசத்தை அறிக்கை செய்வது மட்டுமே, நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் என்று அர்த்தமாயிருக்க அவசியமில்லை. நீங்கள் மெய்யாகவே விசுவாசித்தால், உங்கள் அறிக்கையின் நிரூபணத்தை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் காண்பிக்க வேண்டும். செத்த விசுவாசம் அதாவது, கிரியை இல்லாத விசுவாசம், இரட்சிப்புக்கு நேராய் வழிநடத்தாது (யாக்கோபு 2:17). 'நாம் எவ்வளவு சரியாய் தேவனுடைய வார்த்தையின்படி செயல்படுகிறோம்' என்பதே விசுவாசத்தின் நிரூபணமாய் இருந்து இரட்சிப்பிற்கான அளவு கோலாய் செயல்படுகிறது. அதைப்பொறுத்து, கோதுமை போன்றவர்களும் பதர் போன்ற விசுவாசிகளுமாய் பிரிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆகவே தேவன் எப்போதும் தமது பிரியமான பிள்ளைகள் தங்களை தாங்களே கண்டு அறிந்து மாற்றப்படவும், பரிசுத்த ஆவியால் சத்தியத்தில் வழிநடத்தவும் செய்கிறார்.

அவர்கள் பாவங்களை களைந்து தங்கள் இருதயங்களில் ஆண்டவருடையதை வெளிப்படுத்தவும், அவர் சில நேரங்களில் மாம்சத்தின் மூலமாக நியாயத்தீர்ப்பை அனுமதிக்கிறார். நாம் நம்முடைய வாழ்வில் பரிசுத்த ஆவி, சத்தியம் மற்றும் மாம்சத்தின் மூலமாய் வருகிற நியாயத்தீர்ப்பு எல்லாம் தேவனுடைய அன்பின் தொடுதலே. அதனால் நாம் கடைசி மாபெரும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் நரகாக்கினைக்கு தீர்க்கப்படாமல் அழகான பரலோகத்திற்கு செல்வோம் என்பதை அறிந்திருக்கவேண்டும்.

## பரிசுத்த ஆவியால் நியாயந்தீர்க்கப்படல் என்றால் என்ன?

**"மனிதர்கள் சத்தியத்திற்கு வெளியே செல்லும்போது நிர்பந்தமாகவும் இடுக்கப்பட்டதாகவும் உணருவது"**

யோவான் 16:8ல் வாசிக்கிறோம், "அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்". நாம் ஆண்டவராகிய இயேசுவை நம்முடைய சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொள்ளும்போது பரிசுத்த ஆவியானவர் ஈவாக நமக்கு அருளப்படுகிறார். அந்த ஆவியானவர் நமக்கு, நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கையில், பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கற்பிப்பார். வெளிச்சமாயிருக்கிற தேவனுடைய வார்த்தையின் மூலமாக நாம் நம்முடைய இருதயங்களிலிருக்கிற தீமைகளை அறியச் செய்கிறார்.

பரிசுத்த ஆவியின் உதவியால் கண்டுபிடிக்கப்பட்ட தீமைகளை களைந்து தேவனுடைய வார்த்தையில் நாம் வாழ்வோமேயானால் எப்பொழுதும் பரிசுத்த ஆவியின் நிறைவில் நம்மால் வாழ முடியும். மாறாக, அது பாவமென்று நாம் அறிந்தும் தீமைகளை நாம் களையாது பாவத்தில் வாழ்வோமேயானால் நாம் நிர்பந்தமாகவும் இடுக்கப்பட்டதாகவும் உணருவோம். நமக்கு அப்படிப்பட்ட உணர்வு இருப்பதற்கு காரணம் நம் இருதயத்தில் இருக்கும் இரண்டு ஆசைகளான சத்தியத்தை பின்பற்றும் ஆசை மற்றும் சத்தியமற்றதை பின்பற்றும் ஆசை ஆகியவற்றிற்கு இடையே நடைபெறும் யுத்தத்தாலே.

வேறு வார்த்தையில், சத்தியத்திற்கு புறம்பாக மனிதர்கள் வாழும்போது, பரிசுத்த ஆவியின் நியாயந்தீர்த்தலின் விளைவாக நிர்பந்தமான உணர்வு உண்டாகும். மனிதர்கள் அவ்வாறு உணர்ந்தாலும், தீமைகளை அவர்கள் களைந்து போடாமல், தொடர்ந்து இருளில், பாவத்தில் தீமையில் வாழ்வார்களேயானால், அவர்களில் இருக்கும் ஆவி இறுதியாக அவிந்துபோய்விடும். (பார்க்க : 1 தெசலோனிக்கேயர் 5:19) ஆகவே நாம் நியாயத்தீர்ப்பால் இடுக்கப்பட்டு உணர்ந்தால், துரிதமாக பாவ அறிக்கை செய்து பாவத்திலிருந்து மனந்திரும்பி ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## சத்தியத்தால் நியாயந்தீர்க்கப்படல் என்றால் என்ன?

**"மனிதர்கள் சத்தியத்தை பயிற்சி செய்கிறார்களா என்பதின் அடிப்படையிலே காரியங்கள் நன்றாகவோ அல்லது தவறாகவோ, ஆசீர்வாதமோ அல்லது துன்பமோ வரும்."**

யோவான் 14:6ல் வாசிக்கிறோம், "அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்". அவனோ அல்லது அவளோ சத்தியத்தை உணர்ந்தாலும்கூட எல்லாரும் சத்தியத்தில் நடப்பதில்லை. ஆரம்பத்திலிருந்தே 100% சத்தியத்தை பயிற்சி செய்கிற ஒருவர் இருக்கலாம் என்பது உண்மையென்றாலும் முக்கால்வாசி மக்களால் முடியாது.

நாம் சத்தியமாகிய தேவனுடைய வசனத்திற்குள்ளாய் வாழும்போது, நாம் தேவனுடைய வழிநடத்துதலிலும் பாதுகாப்பின் கீழாகவும் இருந்து செழித்தோங்கும் ஆசீர்வாதத்தை அனுபவிப்போம். கூடுதலாக, நாம் நல்ஆரோக்கியம் மற்றும் பொருளாதார வெற்றியாகிய ஆசீர்வாதங்களை பெறலாம். இருப்பினும், நாம் சத்தியத்தின்படி வாழாவிட்டால், பொருளாதார இக்கட்டு நிலை, நோவு, கஷ்டங்கள் நம் குடும்பத்திலும், வேலை ஸ்தலத்தில் அல்லது தொழிலிலும் சாத்தானின் குற்றச்சாட்டால் வரும்.

விளக்கப்பட்டபடி, சத்தியத்தை கேட்டதால் நாம் உணர்ந்தவற்றை எவ்வளவாய் பயிற்சிக்கிறோமோ, அந்தளவாய் காரியங்கள் நன்றாகவோ அல்லது தவறாகவோ செல்லும் அல்லது ஆசீர்வாதம் அல்லது கஷ்டம் வரும். இதுதான் வார்த்தையின் மூலமாய் வரும் நியாயத்தீர்ப்பு.

## மாம்சத்தின் மூலமாக நியாயந்தீர்க்கப்படல் என்றால் என்ன?

**"சத்தியத்தின் மூலமாக நியாயந்தீர்க்கப்படுகிற நிலையில் விளையும் காணக்கூடிய கனிகள்"**

சத்தியத்தைக் கேட்டு அதை உணர்ந்தாலும் அதில் வாழாமல் போகும்போது, குடும்பத்தில் பிரிவினை அல்லது சரீர வியாதிகள் போன்ற பல பிரச்சனைகள் வரலாம். அல்லது தொழில் கஷ்டத்தை சந்திக்கலாம் அல்லது பொருளாதார சேதமடையலாம். இவ்வாறு சத்தியத்தால் நியாயந்தீர்க்கப்படுதல் காணக்கூடிய கனிகளாய் விளையும். இது மாம்சத்தின் நியாயத்தீர்ப்பு ஆகும்.

பரிசுத்த ஆவி உங்களை நியாயந்தீர்க்கும்போது நீங்கள் அறிக்கை செய்து, அவைகளை விட்டு மனந்திரும்பாவிட்டால், நீங்கள் சத்தியத்தின் மூலமாக நியாயத்தீர்ப்பை சந்திப்பதை தவிர்க்கமுடியாது. இந்த நியாயத்தீர்ப்பின் மத்தியிலும் நீங்கள் மனந்திரும்பாவிட்டால் அடுத்தது மாம்சத்தின் நியாயத்தீர்ப்பாய் இருக்கும். இந்த செய்முறை அனைத்தின் மூலமாக ஒவ்வொருவருடைய விசுவாச அளவும் வெளிப்படும். ஆகவே நாம் 'கோதுமை' மற்றும் 'பதர்'களுக்கிடையே பகுத்தறிந்து கொள்ளலாம். மாபெரும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில், இறுதி நியாயத்தீர்ப்பு பரலோகம் மற்றும் நரகத்திற்கு இடையில் அதாவது, நித்திய ஜீவன் மற்றும் நித்திய மரணம் ஆகியவை கொடுக்கப்படும்.

பரிசுத்த ஆவியின் சத்தத்தை நீங்கள் அலட்சியம் செய்து, சத்தியத்தில் வாழ நீங்கள் மறுத்து, தொடர்ந்து மாம்சீக வாஞ்சைகளை பின்பற்றுவீர்களேயானால், பின் நீங்கள் இறுதி நியாயத்தீர்ப்பிலிருந்து, தப்பிச் செல்ல வாய்ப்பில்லாமல் அக்கினியில் அவிய வேண்டியதாயிருக்கும். அதாவது அது ஏழு–வருட மகா உபத்திரவ காலத்திலும், சதாகாலத்திலும் அவியாத நரக அக்கினி ஆகும். ஆகவே உங்களில் இருக்கும் ஆவி புலம்பினால், நீங்கள் அதை சீக்கிரமாய் உணர்ந்து, அறிக்கை செய்து மனந்திரும்ப வேண்டும். நீங்கள் மாம்சீக நியாயத்தீர்ப்பின்கீழ் இருந்தாலும்கூட, நீங்கள் அறிக்கை செய்து மனந்திரும்பினால், நீங்கள் நித்தியமான அக்கினியின் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்து அதை தவிர்க்கமுடியும்.

அன்பின் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும் பரிசுத்த ஆவியின் மூலமாகவும் சத்தியத்தில் நாம் வாழ உதவுகிறார். அதனால் எல்லா மனிதர்களும் இரட்சிப்பை பெறமுடியும். நித்திய காலமாய் அன்பை பகிரக்கூடிய தமது மெய்யான பிள்ளைகளை பெறுவதற்கு தமது நீண்டகால ஏக்க வாஞ்சையுடன், தேவன் விசுவாசித்து, நம்பி எல்லா காரியங்களையும் சகித்துக்கொண்டார்.

GCN
GLOBAL · CHRISTIAN · NETWORK
Tel: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
Tel: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street,
Villivakkam, Chennai - 600 049
PH: 044-26172471,




Land Mark

# "மனஅழுத்தத்திலிருந்தும் பல வியாதிகளிலிருந்தும் சுகம் பெற்றது என்னை பூரிப்படையச் செய்தது"



கண்காணியை சூன்ஹிசன் மற்றும் அவரது குடும்பத்தினர் (2–19 மாகாணம்)

டிசம்பர் 2011ல் ஒரு நாள், திடீரென்று எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. இந்த அறிகுறி தொடர்ந்தது. சில வேளைகளில் (solar plexus) நரம்பு வலியை உணர்ந்தேன். மருத்துவ பரிசோதனை எனக்கு உணவு செல்லும் பாதையில் கோளாறு இருக்கிறது என காண்பித்தது. நான் நீர் ஆகாரமும், மருந்துகளும் எடுத்துக்கொள்ள துவங்கினேன், ஆனால் அது வேலை செய்யவில்லை. என்னால் சரியாக சாப்பிட முடியவில்லை. அதனால் நாளுக்கு நாள் எனது எடையை அதிகமாக இழந்தேன். ஆகஸ்ட் 2012ல் 10கிலோ (கிட்டத்தட்ட 221b) வரை இழந்துவிட்டேன் என்று அறியலானேன், அசதியாகியும் விட்டேன். சாப்பிட முடியாமல் போனபோது, பயம் என்னில் வளர்ந்து கொண்டு இருந்தது.

இப்படியே செத்துவிடுவேனோ? என்று நான் நினைத்தேன், திருச்சபையில் பங்கு பெற்றேன், ஆனால் தேவனுடைய வார்த்தையின்படி நான் வாழ்ந்தேன் என்று நான் நினைக்கவில்லை. ஆகவே என்னுடைய வேதனையை என்னால் உதற முடியவில்லை. பின்னதாக, எதிர்மறையான சிந்தனை என்னில் வளர்ந்து கொண்டு இருந்தது.

நான் தனிமையாகவும் என் திருமண வாழ்வை குறித்து சந்தோஷமற்றதாகவும்கூட நினைத்தேன், காரணம் என் கணவர் வேலையின்நிமித்தம் அடிக்கடி வெளியே போய்விடுவார். விவாகரத்து செய்துவிடலாம் என்றுகூட நினைத்தேன். நான் தனிமையாய் இருக்கும்போது தொடர்ந்து எதிர்மறையான சிந்தனைகள் எனக்கு வந்து கொண்டு இருந்தது. ஒரு எதிர்மறையான சிந்தனை மற்றொரு எதிர்மறையான சிந்தனையால் தொடரப்பட்டது. என் முழு சரீரமும் உதறல் எடுக்கும் அளவிற்கு நான் கட்டுக்கடங்காத படபடப்பை உணர்ந்தேன்.

எனது இயல்பற்ற நிலைமையை என் கணவர் கவனித்து அவர் ஆச்சர்யப்பட்டார். ஒவ்வொரு நாள் காலையும், எல்லாவற்றையும் அவர் ஒதுக்கிவைத்துவிட்டு, மான்மின் ஜெப மைய கூட்டத்திற்கு என்னை காரில் கொண்டு வந்துவிடுவார். செய்தியை கேட்டு நான் பாவஅறிக்கை செய்து மனந்திரும்பினேன். "தேவனே! நான் சரியான கிறிஸ்தவ வாழ்க்கை வாழவில்லை. எனக்கு ஜீவன் தாரும், தயவாக கெஞ்சி கேட்கிறேன்! இப்படியே நான் போய் என் பிள்ளையை தனியே விடமுடியாது. நான் சுகம்பெறுவதின் மூலம் உம்மை மகிமைப்படுத்த விரும்புகிறேன்"

ஆனால் உடனடியாக எனக்கு பதில் கிடைக்கவில்லை. செப்டம்பர் 2012 முற்பகுதியில் எனக்கு பய உணர்வுடன்கூடிய மன அழுத்தம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இறுதியாக, நான் என்னை தானே முற்றிலுமாய் பின்னோக்கி ஆராய்ந்து பார்த்து, என் கடந்த கால கிறிஸ்தவ வாழ்க்கை தவறு என்று உணர்ந்தேன்.

என்னை சுற்றி இருந்த மக்களை வெறுத்திருந்திருக்கிறேன், மற்றவர்களை திட்டி நியாயம் தீர்த்து, குற்றஞ்சாட்டியிருந்திருக்கிறேன். ஆவியிலும் உண்மையிலும் நான் ஆராதனை செய்யவில்லை. தொலைக்காட்சியில் நாடகம் பார்ப்பதற்காக ஜெபக்கூட்டத்தை தவற விட்டிருந்திருக்கிறேன். இந்த காரியங்கள் என் மனத்திரைக்கு முன் வந்தன. நான் ஒரு வாரம் முழுவதும் கண்ணீர் சிந்தி, மூக்கிலிருந்து தண்ணீர் வழிய முற்றிலும் அறிக்கை செய்து மனந்திரும்பினேன்.

பின், தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெப மலை வீட்டிலிருந்து வந்த பின்னர், நான் அவருடைய ஜெபத்தை மொத்தம் மூன்று முறை பெற்றுக்கொண்டேன். செப்டம்பர் 21, 2012 அன்று, வெள்ளி இரவு ஆராதனைக்கு முன்னதாக, பல அங்கத்தினர்களுடன் இணைந்து மேடையிலிருந்து வந்த வியாதியஸ்தர்களுக்கான அவரது ஜெபத்தை பெற்றுக்கொண்டேன். அதன் பின் பய உணர்வு கோளாரிலிருந்து ஓரளவு விடுதலைப்பெற்று, முன்பை காட்டிலும் நன்கு சாப்பிட ஆரம்பித்தேன்.

செப்டம்பர் 28 அன்று, அறிவர்.லீ அவர்கள், "நீ பார்க்க, கேட்க மற்றும் பேசக் கூடாதவைகளை பார்க்கவோ, கேட்கவோ பேசவோ கூடாதென்று" எனக்கு ஆலோசனை சொன்னார். இரண்டாவது முறையாகவும் அவர் எனக்காக ஜெபித்தார். அவருடைய வார்த்தைகளை என் இருதயத்தில் மீண்டும் ஒருவிசையாய் செதுக்கி வைத்தேன், அதன்பின் பயமும் வியாகுலமும் என்னை விட்டு முற்றிலுமாய் நீங்கி மறைந்துபோனது. அக்டோபர் 7 அன்று, அவரது ஜெபத்தை நான் மூன்றாவது முறையாய் பெற்றுக்கொண்டேன். பின், சமாதானமும் மகிழ்ச்சியும் பரத்திலிருந்து என்னிடத்திற்கு இறங்கி வந்தது. நான் பூரிப்படைந்தேன்! அல்லேலூயா!

நான் உணவு செல்லும் பாதை கோளாரிலிருந்து சுகம் பெற்று எடை கூடினேன். கூடுதலாக, நான் போலகிஸ் யூரியாவிலிருந்தும், முதுகு தண்டுவட நகர்வு, தொண்டை புண், மாதவிடாய் வலி மற்றும் தலைவலியிலிருந்தும் சுகம் பெற்றேன். நான் சோர்வாய் இருக்கும்போது அல்லது கோழிக்கறி சாப்பிடும்போது என்னுடைய கண் இரத்த சிவப்பாய் மாறிவிடும். ஆனால் இந்த அறிகுறிகளும்கூட மறைந்துவிட்டன. இன்னும் அதிகமாக நன்றி சொல்வதற்கு ஏதுவானது என்னவென்றால் எனது கணவர் 11–வருட இடைவெளிக்குப் பின்னர் திருச்சபைக்கு மீண்டும் வந்தார்.

இன்றைய நாட்களில், நான் நேர்மறையான எண்ணங்களையும் நல்ல சிந்தனைகளையும் கொண்டிருப்பதால் நான் மிகவும் சந்தோஷமாயிருக்கிறேன். நன்றி நிறைந்த என் இருதயத்தோடுகூட நான் மான்மின் செய்தித்தாள்களை ஊக்கமாய் அநுதினமும் பரப்பி கொடுத்து கொண்டிருக்கிறேன். என்னை புதிய சிருஷ்டியாய் மாற்றி எனக்கு பதிலளித்த தேவனுக்கு எல்லா மகிமையையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறேன்.

நான் இந்தியா, தமிழ்நாடு, வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவ கல்லூரியில் (CMC) இருந்து பட்டம் பெற்ற குழந்தைகள் நல மருத்துவர். 2005ல், இந்தியாவில் உள்ள சென்னையில் நடைபெற்ற WCDN (World Christian Doctors Network)ன் 2வது சர்வதேச கிறிஸ்தவ மருத்துவர் மாநாட்டில் நான் பங்கு பெற நேர்ந்தது. WCDN என்பது தெய்வீக சுகம் பெற்ற சாட்சிகளை அறிமுகம் செய்வதின்மூலம் சுவிசேஷத்தை பரப்புகிற உலகமுழுவதிலும் உள்ள கிறிஸ்தவ மருத்துவர்களின் நிறுவனமாகும்.

1988ல், 24 வருடங்களுக்கு முன்பு, தேவனுடைய வல்லமையால் நான் மார்பக புற்றுநோயிலிருந்து சுகம் பெற்றேன். ஆகவே சுகமளிக்கிற தேவனைக் குறித்த நிச்சயம் எனக்கிருந்தது. (யாத்திராகமம் 15:26). இப்படிப்பட்ட அனுபவத்துடன் இருந்த எனக்கு WCDN ஊழியம் மிகவும் ஆர்வத்தை தூண்டியது. குறிப்பாக, அறிவர்.ஜேராக் லீ அவர்களது ஜெபத்தின் மூலமாக தேவனுடைய வல்லமையால் சுகம்பெற்ற மக்களின் சாட்சிகள் என்னை மிகவும் ஆச்சர்யப்படுத்தியது.

## "மான்மின் மத்திய திருச்சபை தேவனுடைய அன்பும் வல்லமையும் நிறைந்திருக்கிற நல் உதாரணமான ஒரு திருச்சபை"



இடது, மருத்துவர். டாரதி சாமுவேல் மற்றும் வலது அவரது கணவர் திரு.D.J. சாமுவேல்

இந்திய மாநாட்டில், சென்னை மான்மின் திருச்சபையின் போதகர். ஜோசப் J. ஹான் அவர்களை நான் அறிய நேர்ந்தது. அதுமுதல் தொடர்தேர்ச்சியான அடிப்படையில் ஆங்கிலத்திலும், தமிழிலும் மான்மின் செய்தித்தாள்கள் அளிக்கப்பட்டன. அவைகள் மூலமாக நான் அதிகமான கிருபையை பெற்றேன். அச்சமயம் ஆகஸ்டு 2012ல், நான் மான்மின் மத்திய திருச்சபையில் 30வது ஆண்டு விழா கொண்டாட்டத்தை குறித்து கேள்விப்பட்டேன். நானும் எனது கணவரும் கொரியாவில் உள்ள திருச்சபைக்கு விஜயம் மேற்கொள்ள தீர்மானித்தோம்.

புறப்படுவதற்கு முன்பு, போதகர். ஜோசப் ஹான் அவர்கள் அறிவர்.லீ அவர்களது சுய சரிதையான என் வாழ்வும், என் விசுவாசமும் I & II–ஐ எனக்கு கொடுத்தார். நாங்கள் கொரியாவிற்கு செல்வதற்கு முன் அவைகளை வாசிக்கும்படி கேட்டுக்கொண்டார். அப்புத்தகங்களை வாசித்தபின், தன் வாழ்வில் எல்லாவற்றிற்காகவும் தேவனை கேட்டு முற்றிலும் அவரையே சார்ந்துகொண்டு அவருக்கு கீழ்ப்படிந்த அறிவர்.ஜேராக் லீ அவர்களது வாழ்வினால், நானும் எனது கணவரும் பெரிதும் தொடப்பட்டோம். அவர் தேவனுடைய மனுஷன் என்று நான் மனதில் அறிந்துகொண்டேன்.

அக்டோபர் 2, 2012ல், நாங்கள் கொரியாவிற்கு வந்து சேர்ந்தோம், மான்மின் அங்கத்தினர்கள் எங்களை இதமாக வரவேற்றனர். சந்தோஷத்துடன் எங்கள் விஜயத்தை அனுபவித்தோம். சில நாட்களுக்கு பின்னர் அறிவர்.லீ அவர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்தோம். அவர் மிகவும் தாழ்மையும் உண்மையுள்ளவராயும் இருந்தபடியால், தேவ அன்பை அவர் மூலமாக என்னால் உணரமுடிந்தது. மேலும், ஆராதனை வேளைகளில் அறிவர்.லீ அவர்களது செய்திகள் மிகவும் தெளிவாகவும் வல்லமையுள்ளதாகவும் இருந்தன. அவைகள் என்னை தொட்டன.

தேவன், அவருக்கு பயந்துள்ள உண்மையான ஊழியருக்காக கிரியை செய்கிறார். இப்படிப்பட்ட ஒரு தலைவரை பெற்றது, மான்மின் மத்திய திருச்சபையின் ஆசீர்வாதம். அறிவர். லீ அவர்கள் தமது திருச்சபை ஊழியத்தை தேவ ஞானத்தோடும், பரிசுத்த ஆவியின் உதவியோடும் செய்தார். மேலும் அங்கத்தினர்களுக்கு மேய்ப்பரோடு ஒரே இருதயமும் ஒரே சித்தமும் இருக்கிறது.

இந்த விஜயத்தில், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிற வாழ்வு எவ்வளவு ஆசீர்வாதமானது என்பதை தெளிவாய் உணர்ந்து கொண்டேன். உலகத்திலிருக்கிற எல்லாத் திருச்சபைக்கும் நல்உதாரணமாயிருக்கிற மான்மின் மத்திய திருச்சபை உலகளாவிய சுவிசேஷ பணியை இன்னும் மாபெரிதாய் நிறைவேற்றும்படிக்கு ஜெபிக்கிறேன்.